**MINUTES OF THE PUBLIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING ENVIRONMENTAL CLEARANCE FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF M/s. SURYA STONES, S.F.NO. 123 (BLOCK-1), PADALUR (EAST) VILLAGE, ALATHUR TALUK, PERAMBALUR DISTRICT OVER AN EXTENT OF 1.50.00 HECTARES AT M/s. SRI VENKATESWARA THIRUMANA MANDAPAM, KANNAN COMPLEX, OOTATHUR ROAD, PADALUR VILLAGE, ALATHUR TALUK, PERAMBALUR ON 27.02.2026.**

**PRESIDING OFFICERS:**

| | | | |
|---|---|---|---|
| 1. | Mr. S.Sornaraj | : | Personal Assistant to the District Collector (General)/ Deputy Collector Perambalur District. |
| 2. | Mrs. S. Vijaya Priya | : | District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur District. |
| **PROPRIETOR:** | | | |
| 3. | Thiru. C. Vasantha Bhagalavan, Partner | : | **Project :** Rough Stone Quarry of M/s. Surya Stones, S.F.No. 123 (Block - 1), Padalur East Village, Alathur Taluk, Perambalur District. |

The total number of people who attended the meeting, including the Proprietor of the quarry, Government Officials, Environmental Activists and the General Public was 249. (Copy of the attendance register is attached herewith).

**District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Perambalur, said** Good morning to everyone. In Perambalur District, Alathur Taluk, Padalur East Village, Tmt./Thiru Surya Stones has proposed a rough stone quarry in government poramboke land in Survey No. 123 (Block 1) with a total extent of 1.50 hectares. For conducting the Public Hearing for this rough stone quarry project, I extend a warm welcome, on behalf of the Tamil Nadu Pollution Control Board and the District Administration, to the Personal Assistant/(General) to the District Collector, the Sub-Collector who has come to preside over

and conduct this meeting, the general public, volunteers, police officials, and friends from the press and media.

Since the proposed project is located within a quarry cluster area of 11.75 hectares, this public hearing meeting is being conducted as part of the process for obtaining Environmental Clearance from the State Environment Impact Assessment Authority (SEIAA) for establishing the quarry. A public notice regarding this meeting was published on 24.01.2026 in *The New Indian Express* English daily and *Daily Thanthi* Tamil daily newspapers. The notice was published at least 30 days in advance. In addition, to ensure that the residents of Padalur East Village and the surrounding villages are aware of the public hearing, announcements were already made through pamphlets and loudspeaker publicity in the nearby areas. The project environmental consultant will now explain the proposed project in detail. After that, members of the public may individually present their views by stating their name and address and recording their opinions. All opinions expressed will be recorded in audio and video form and will be forwarded to the State Environment Impact Assessment Authority. Now, the project's environmental consultant will explain the details of the project. The public is requested to maintain silence and listen carefully to the presentation being made.

**Project Environmental Advisor:** The project consultant explained the project to the public through a Power Point Presentation.

**District Environmental Engineer:** Members of the public are requested to provide their name and village details and then record their opinions.

**Deputy Collector:** If any member of the public wishes to submit a petition, they may hand it over to me here. Even if you have written down your views, you may submit them as a petition to me. Before expressing their opinions, members of the public are requested to clearly state their name and the area they belong to, and then record their views.

**1. Mr. M. Pasupathi, Padalur**

Good morning to everyone. There are many drivers in our village, and they will benefit from this. It will be very good if the quarry operates without affecting natural resources. I am very happy about the quarry coming here and I welcome it.

**2. Mrs. Jebakani, NGO, Social Activist**

Respected officials who have come to attend this public consultation meeting, and the women, elders, and socially conscious members of the public present here, greetings to all. I have been working for many years as an environmental worker and social activist. According to the provisions of the 2018 Indian regulations, whether it is the establishment of a stone quarry or a factory, it is necessary to record opinions or objections from the public. Based on that, I would like to present my views here. If there is a stone quarry, it will certainly support construction activities such as building houses, constructing offices, and developing roads and other infrastructure. Therefore, a quarry is definitely necessary for such purposes. At the same time, it also provides significant employment opportunities to the people living in the surrounding areas. Both educated and uneducated youth will get job opportunities. Likewise, the company also participates and supports people during special occasions. Therefore, I kindly express my opinion that this company should be granted the No Objection Certificate without any hindrance. With this, I conclude my remarks. Thank you. Vanakkam.

**3. Mrs. Shanthi, Oottathur:**

"This stone-breaking work is what we depend on for our food and livelihood," she said.

**4. Mrs. Chitra, Padalur**

I welcome all the members of the public who have come to attend the stone quarry meeting. If you look at our area, most of the people here are daily wage workers. In our region, when a stone quarry starts operating, many women also get employment as stone-breaking workers. This provides them with many job opportunities.At the same time, the quarry will operate in a safe manner so that no accidents or unfortunate incidents occur because of it, ensuring a secure environment for the people. Therefore, this is something that should be welcomed. I sincerely request everyone to extend their support.

**5. Mrs. Priya, Padalur**

My name is Priya. I am from Padalur. I have worked in a quarry before. A quarry is very necessary, so it should be supported. No work is easy, but even if there are difficulties, we can inform the management and they can correct them. Therefore, I request that we welcome them.

**6. Mr. Murugesan, Driver, Padalur**

Good morning to everyone. My village is Padalur and I work as a driver. With this quarry coming here, I will be able to drive vehicles locally and benefit from it.

**7. Mr. Saravanan, Padalur**

I warmly welcome the district administration and the officials of the Pollution Control Board who have come here today. I also welcome all the members of the public who have come to express their opinions at this public consultation meeting. In the present situation, a quarry has become an essential requirement because it supports the construction sector, road development, and employment opportunities. It provides work especially for drivers and laborers, including stone-breaking workers. At the same time, quarry management must give importance to pollution control. Whether it is smoke or dust, controlling pollution is very important. Livelihood is important, but breathing and health are also important. To live, we need clean air. Therefore, the quarry management must ensure that farmers are not affected and that the agricultural lands around the quarry are protected. Protective barriers should be set up around the quarry, and the environmental authorities should monitor this. Likewise, the nearby residential areas should not be affected by dust or pollution that may cause breathing problems or dust allergies, which could lead to health issues requiring medical attention. Workers involved in stone-breaking should also be ensured proper safety. The management must take responsibility for all these aspects and provide adequate safety measures. Overall, the quarry is necessary, but agriculture is also important, and the lives of the people are very important. Only if people remain healthy and alive can they work. Their health and safety must be protected. Thank you.

**Deputy Collector:** A kind request to the general public. This meeting has been convened to record your opinions. Therefore, those who wish to express their views regarding the establishment of this quarry are requested to come to the stage promptly, state your name and the area you belong to, and then express your views. If there are no further opinions to be shared, we may conclude this public consultation meeting with your consent. Hence, on behalf of the district administration, we request the members of the public who wish to express their views to come forward immediately and present their opinions without delay.

**8. Mrs. Logeswari, Padalur**

I am from Padalur. I welcome the stone quarry.

**9. Mrs. Revathi, Padalur**

Good morning to everyone. My name is Revathi from Padalur. My husband used to work as a driver. Due to his poor health, I started working in the quarry and my family is doing well now. You and all the members of the public should support the quarry. Thank you, Vanakkam.

**10. Mrs. Gauthami, Oothangal**

"I am coming from Oothankal. We run a hotel named *Bharathi* at the Padalur bus stop. When we asked for a proper water facility, the clerk told us to use water from the well. If we request them to provide a pipe connection, they say they cannot give it. Children, elderly people, and adults are all struggling a lot because of the lack of water. Some people even faint due to the difficulty. They say they will not provide a pipe connection. Please make arrangements to provide a water pipe line facility," she said.

**11. Mrs. Lakshmi, Madurai**

Greetings to everyone present here. With the establishment of this quarry, the people in the village will get employment opportunities. Not only that, road facilities and bus facilities will also improve. Therefore, I request everyone to welcome the quarry.

**12. Mr. Kandasamy, Thiruvalakkurichi**

I extend my good morning to the officials present here, and also to all the members of the public on behalf of our village. Everyone here already knows about this stone quarry. Even though we know about it, if we are to support it, the owner should not support only certain individuals separately; instead, everyone should benefit from it equally. As much as possible, you should provide adequate facilities for the children of this school so that they can study properly, because they face many difficulties. Please try to help by providing items such as pens, pencils, notebooks, extra pencils, and other necessary materials. Likewise, the quarry owners should also take care of the environment around the quarry. Thank you.

**Deputy Collector:** Shall we conclude this public consultation meeting? What do the women present here say? With your consent, we will conclude this public hearing. All the opinions expressed by you have already been recorded. The petitions submitted will also be brought to the attention of the district administration and forwarded to the concerned engineering authorities. On behalf of the district administration, I would like to express my sincere thanks

to the members of the public who cooperated in this public consultation meeting, as well as to the government officials, friends from the press and police departments, and the officials of the Pollution Control Board. Thank you.

**Enclosures:**

1. Copy of attendance register of Public hearing (21 pages - 249 members)
2. Project summary Presentation.
3. Copy of petitions received during Public hearing-15 Nos.
4. Video recording of public hearing Pendrive.

16/03/26

**District Environmental Engineer,**
**Tamil Nadu Pollution Control Board,**
**Perambalur.**

16/3/26

**Personal Assistant to Collector**
**(General)/ Deputy Collector,**
**Perambalur.**

**பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், பாடாலூர் கிழக்கு கிராமத்தில் தி/ள். சூர்யா ஸ்டோன்ஸ் சாதாரண கல்குவாரி, புல எண்: 123 (தொகுதி 1)ல் 1.50.00 ஹெக்டேர் பரப்பளவில் அமையவுள்ள சாதாரணக் கல் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவதற்காக பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், பாடாலூர் கிராமம், ஊட்டத்தூர் சாலை, கண்ணன் காம்ப்ளக்ஸில் அமைந்துள்ள தி/ள். ஸ்ரீ வெங்கடேஸ்வர திருமண மண்டபத்தில் 27.02.2026 அன்று நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**தலைமை அதிகாரிகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. எஸ்.சொர்ணராஜ் | : | மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (பொது)/துணை ஆட்சியர்,<br>பெரம்பலூர் மாவட்டம். |
| 2. | திருமதி. சு. விஜய பிரியா | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>பெரம்பலூர். |
| **நிறுவனத்தினர்** | | | |
| 3. | C. வசந்த பகலவன்,<br>பங்குதாரர். | : | **திட்டம்-1**<br>தி/ள். சூர்யா ஸ்டோன்ஸ் சாதாரண கல் குவாரி,<br>புல எண்: 123 (தொகுதி 1),<br>பாடாலூர் கிழக்கு கிராமம்,<br>ஆலத்தூர் வட்டம்,<br>பெரம்பலூர் மாவட்டம். |

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர், அரசு அலுவலர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் பொது மக்களின் மொத்த எண்ணிக்கை – 249 ஆகும். (வருகைப் பதிவேட்டின் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பெரம்பலூர்** அவர்கள், கருத்து கேட்புக் கூட்டத்தினை துவக்கி வைத்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் பேசியதாவது:

அனைவருக்கும் இனிய காலை வணக்கம் பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் வட்டம், பாடாலூர் கிழக்கு கிராமம், தி/ள். சூர்யா ஸ்டோன்ஸ் சாதாரண கல் குவாரி அரசு புறம்போக்கு நிலத்தின் புல எண்: 123(தொகுதி 1) மொத்த பரப்பளவு 1.50 ஹெக்டேர் அளவு உள்ள சாதாரண கல்குவாரிக்கான பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்த வந்துள்ள

பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர்/துணை ஆட்சியர் அவர்களையும் ஏனைய பொது மக்களையும் தன்னார்வலர்களையும் காவல்துறை அதிகாரிகள் பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்கள் அனைவரையும் தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாகவும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாகவும் வரவேற்கிறேன்.

முன்மொழியப்பட்ட இந்தத்திட்டம் 11.75 ஹெக்டேர் குவாரி குழுமத்திற்குள் அமைவதால் இந்த கல்குவாரி ஏற்படுத்துவதற்கு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு இக்கூட்டமானது நடைபெற்று கொண்டு இருக்கிறது. இன்று நடைபெற்று கொண்டிருக்கும் இந்த கூட்டம் குறித்து 24.01.2026 தேதியிட்ட தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் மற்றும் தினத்தந்தி தமிழ் நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. அவை 30 நாட்களுக்கு முன்பாகவே பத்திரிகை செய்தி வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பொதுமக்கள் கருத்துக்கேட்புக் கூட்டம் குறித்து பாடாலூர் கிழக்கு கிராமத்தில் வசிக்கும் பொதுமக்கள் தெறிந்து கொள்ளும் வகையில், அதன் சுற்று வட்டார கிராமங்களிலும் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் ஏற்கனவே விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. முன்மொழியப்பட்ட இந்த திட்டம் குறித்து திட்ட ஆலோசகர் விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை ஒவ்வொருவராக பெயர் மற்றும் முகவரியை தெரிவித்து விட்டு கருத்துக்களை பதிவு செய்யலாம். பதிவு செய்யப்படும் அனைத்து கருத்துகளும் ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அவ்வாறு பதிவு செய்யப்படும் அனைத்து கருத்துகளும் ஒலி மற்றும் ஒளி வடிவில் பதிவு செய்யப்பட்டு, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்படும். தற்போது திட்ட சுற்றுச்சூழல் ஆலோசகர் அவர்கள் இந்த திட்டம் குறித்து விரிவாக எடுத்துரைப்பார்கள். பொதுமக்கள் அனைவரும் அமைதி காத்து, அவர்கள் கூறக்கூடிய கருத்துக்களை கவனிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

**திட்ட ஆலோசகர்:** அவர்கள் இத்திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விளக்கினார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:** அவர்கள் கூறியதாவது: பொதுமக்கள் பெயர் மற்றும் ஊர் விபரங்களை தெரிவித்துவிட்டு கருத்துக்களை பதிவுசெய்யவும்.

**மாவட்ட துணை ஆட்சியர்** : அவர்கள் கூறியதாவது: பொதுமக்கள் ஏதாவது மனு கொடுக்க விருப்பம் இருந்தால் அதை இங்கு என்னிடம் தரலாம். ஏதாவது எழுதிவைத்திருக்கிறீர்கள் அப்படினாலும் மனு கொடுப்பது என்றாலும் என்னிடம் கொடுக்கலாம். பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்கும் முன்பு அவர்கள் பெயர் எந்த பகுதியை சார்ந்தவர் என்று தெளிவாக கூறிவிட்டு அவர்களது கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. **திரு. Mபசுபதி, பாடாலூர்**

அனைவருக்கும், இனிய காலை வணக்கம்.நம்ம ஊரில் ஓட்டுனர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஓட்டுனர்கள் பயனடைவார்கள். இயற்கைவளங்கள் பாதிக்கப்படாமல் செயல்பட்டால் ரொம்ப நல்லது. குவாரிவருவது மிக்க மகிழ்ச்சி வரவேற்கிறேன்.

2. **திருமதி. ஜெபக்கனி, NGO, சமூக செயற்பாட்டாளர்**

இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அலுவளர்கள் அவர்களே. மேலும், இங்கே பொதுமக்களாகிய மகளிர்களே, பெரியோர்களே, சமூக எண்ணம் கொண்ட சமூக ஆர்வலர்களே, நான் ஒரு சுற்றுச்சூழல் அலுவலராக, சமூக ஆர்வலராக பல ஆண்டுகள் பணியாற்றி வருகிறேன். 2018 இந்தியா சட்டத்தின் படி ஒரு கல்குவாரி அமைப்பதாக இருந்தாலும் தொழிற்சாலை அமைப்பதாக இருத்தாலும் ஆட்சியப்பனையோ கருத்துக்களோ பதிவிட வேண்டும் என்பது ஒரு கருத்து அதன் படி என்னுடைய கருத்தை இங்கே முன்வைக்கிறேன். ஒரு கல்குவாரி இருந்தால் கட்டுமானப் பணிகள் கண்டிப்பாக வீடுகள் கட்டுவதற்கோ அலுவலக ரீதியாக அலுவலகங்கள் கட்டுவதற்கு ரோடு போட சாலை வசதி அமைப்பதற்கு அனைத்துக்குமே இந்த கல்குவாரி கண்டிப்பாக தேவையான ஒன்று. அதுபோன்று அதை சுற்றியுள்ள மக்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புக் கிடைக்கின்றது. படித்த இளைஞர்களுக்கு படிக்காத இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்றது.இதுபோல, அவர்கள் விசேஷ காலங்களில் கலந்து கொள்கிறார்கள். அதனால், இந்த நிறுவனமானது கண்டிப்பாக தடையில்லாத சான்றிதழ் வழங்கும்படி அன்போடு எனது கருத்தை தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

3. **திருமதி. சாந்தி, ஊட்டத்தூர்**

" இந்த கல் உடைப்பு தொழில் தான் நாங்கள் சாப்புடுகிறோம், வேலை செய்கிறோம்." என்று கூறினார்.

4. **திருமதி. சித்ரா, பாடாலூர்**

கல்குவாரி கூட்டத்திற்கு வருகை புரிந்திருக்கும் பொதுமக்கள் அனைவரையும் வருக வருக என்று வரவேற்கிறேன். நம்ம பகுதியில் பார்த்தீர்கள் என்றால் கூலி வேலை செய்கிறவர்கள் எல்லாம் அதிகமாக இருக்கிறார்கள். நம் பகுதியில். இப்போது, ஒரு கல்குவாரி வந்தது என்றால் அதில் நிறைய பெண்கள் கூட கல்லுடைக்கும் தொழிலாளியாக வேலை செய்வார்கள். அவர்களுக்கு நிறைய வேலைவாய்ப்பு கிடைக்கும். மற்றபடி, அந்த கல்குவாரியால் எந்த வித அசம்பாவிதமும் ஏற்படாத வண்ணம் மக்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையில் இந்த கல்குவாரி இயங்கப்போகிறது. அதனால், இது வரவேற்கத்தக்கது. எல்லோரும் ஆதரவு தெரிவிக்க வேண்டுமென்று மனமார கேட்டுக்கொள்கிறேன்.

5. **திருமதி. பிரியா, பாடாலூர்**

என்பெயர் பிரியா. நான் பாடாலூர் தான். நான் கல்குவாரியில் வேலை செய்திருக்கிறேன். கல்குவாரி ரொம்ப அவசியமானது. அதனால், கல்குவாரியை ஆதரிக்கணும். எந்த வேலையும் கஷ்டம் இல்லை. ஆனால். நம்ம அதுல உள்ள , எவ்ளோ கஷ்டம் இருந்தாலும் அவர்களிடம் நாம் சொல்கிறோம். அதை அவர்கள் சரி பண்ணிக்க முடியும். அதனால், அவங்களை வரவேற்கணும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

6. **திரு. முருகேசன், ஓட்டுநர், பாடாலூர்**

எல்லோருக்கும் காலை வணக்கம். என் ஊர் பெயர் பாடாலூர். நான் டிரைவராக இருக்கிறேன். இந்த குவாரி வருவதால் லோக்கலில் வண்டி ஓட்டுவேன்.

7. **திரு. சரவணன், பாடாலூர்**

வந்திருக்கக்கூடிய மாவட்ட ஆட்சி நிர்வாகமும் மற்றும் சுற்றுச்சுழல் மாசுக்கட்டுப்பாடு வாரிய நிர்வாகமும் வருக வருக என வரவேற்று, இந்த நல்லதொரு நாளிலே கருத்துக்கேட்புக் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள கருத்துக்கூறும் பொதுமக்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்று, இப்பொழுது நடந்துவரும் சூழ்நிலையில் கல்குவாரி அத்தியாவசியமான ஒன்றாகிவிட்டது. ஏனென்றால் கட்டுமான தொழிலுக்கும், சாலை வசதிக்கும் மற்றும் வேலைவாய்ப்புக்கு முக்கியமாக, ஓட்னர்களுக்கு மற்றும் தொழிலார்களுக்கு கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கு வேலை வழங்குவது, அதே சமயம், நிர்வாகம் கல்குவாரி நிர்வாகத்தில் முக்கியமானது மாசு மாசு கட்டுப்பாடு முக்கியம். புகை மண்டலமாக இருத்தாலும் சரி தான், புழுதி மண்டலமாக இருந்தாலும் சரி தான். மாசு கட்டுப்பாடு முக்கியம். வாழ்வாதாரம் முக்கியம். சுவாசம் முக்கியம். உயிர் வாழனும்னா சுவாசம் ரொம்ப தேவைப்படுகிறது. எனவே, பொதுமக்கள், கல்குவாரியுடைய நிர்வாகம், விவசாயியை பாதிக்காத வண்ணம், கல்குவாரியை சுற்றியுள்ள விவசாயம் பாதுகாப்பு முக்கியம். கல்குவாரியை சுற்றி தடுப்புகள் அமைக்க வேண்டும். அதை சுற்றுச்சூழல் நிர்வாகம் பார்த்துக்கொள்ள வேண்டும். அதே சமயத்தில் அங்கே பக்கத்தில் வாழக்கூடிய பொதுமக்கள் குடியிருப்பு மையங்கள், அவங்க சுவாசங்கள் பாதிக்காத வண்ணம், அவங்க சுவாசிக்கும் போது டஸ்ட் அலர்ஜி உள்ளே போய்விட்டு எல்லாம் செட்டில் ஆகிக்கும், மருத்துவ மனைக்குக் கொண்டு போகிற சூழல் எல்லாம் இருக்கும். அதெல்லாம் நீங்க அனுபவித்திருப்பீர்கள், அதே சமயம், கல் உடைக்கும் தொழிலாளர்கள் பாதுக்காப்பாக இருக்க வேண்டும். அடுத்து, நிர்வாகம் தான் ஏற்று கொள்ள வேண்டும் எல்லா பொறுப்புகளையும். பாதுகாப்பை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். மற்றபடி, கல்குவாரி தேவையான ஒன்று. விவசாயம் முக்கியமானது. மக்கள் உயிர் முக்கியமானது. மக்கள் உயிரே இருந்தால் தான் வேலை செய்ய முடியும். அவர்கள் உடல் உறுப்புக்கள் முக்கியம். பாதுகாப்பு வேண்டும். நன்றி.

**துணை ஆட்சியர் அவர்கள்:** பொது மக்களுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். தங்களுடைய கருத்துக்களை பதிவு செய்வதற்காக கூட்டம் கூட்டப்பட்டுள்ளது. எனவே, இந்த குவாரி அமைவது தொடர்பான தங்களது கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புபவர்கள் கொஞ்சம் விரைவாக மேடைக்கு வந்து தங்களது பெயர் மற்றும் தங்கள் எந்த பகுதியை சார்ந்தவர் என்று கூறிவிட்டு தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கவும் என்று கேட்டுக்கொள்கிறோம். தங்களது கருத்துகள் கூறுவதற்கு தனியாக ஏதும் இல்லை என்றால் விரைவில் இந்த கருத்துக்கேட்புக்கூட்டத்தை உங்களுடைய சம்மதத்துடன் முடித்துக்கொள்ளவும் செய்யலாம். அதனால் கருத்துக்களைக் கூறும் பொதுமக்கள் கொஞ்சம் உடனடியான வந்து கருத்துக்களை தாமதமின்றி தெரிவிக்குமாறு மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம்.

8. **திருமதி. லோகேஸ்வரி, பாடாலூர்**

நான் பாடலூரில் இருந்து வருகிறேன். கல்குவாரியை வரவேர்க்கிறேன்.

9. **திருமதி. ரேவதி, பாடாலூர்**

அனைவருக்கும் காலை வணக்கம். என் பெயர் ரேவதி, பாடாலூர்.என் வீட்டுக்காரர் வண்டி ஓட்டிகிட்டு இருந்தார். கணவருக்கு உடல்நிலை சரி இல்லாத காரணத்தால் கல்குவாரியில் வேலை செய்து என்னுடைய குடும்பம் நல்லா இருக்கு. நீங்களும், பொது மக்கள் அனைவரும் கல்குவாரிக்கு சப்போர்ட் பண்ணுங்கள். நன்றி, வணக்கம்.

10. **திருமதி.கௌதமி, ஊத்தாங்கல்**

"ஊத்தாங்கலில் இருந்து வருகிறேன். பாரதி என்று ஹோட்டல் வச்சிருக்கோம். பாடாலூர் பஸ்டாப்யில். தண்ணீர் வசதி வேண்டும் என்று கேட்டதற்கு, கிளெர்க் கிணற்று தண்ணீர் பயன்படுத்துங்கள் என்று சொல்கிறார்கள். ஒரு பைப் வசதி செய்துதருமாறு சொன்னால் கொடுக்க மாட்டார்களாம். குழந்தைகள், வயதானவர்கள், பெரியவவர்கள் எல்லோரும் தண்ணிருக்காக ரொம்ப கஷ்டபடுகிறார்கள். மயக்கம்போட்டு விழுந்துடுறாங்க. பைப் வசதி போட்டு தரமாட்டேனு சொல்கிறார்கள். போட்டு கொடுக்குறமாதிரி பண்ணுங்கள்." என்று கூறினார்.

11. **திருமதி. லட்சுமி, மதுரை**

இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் வணக்கம். இந்த கல்குவாரி வருவதால் கிரமத்தில் இருக்கும் மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும். அதுமட்டும் இல்லாமல் சாலை வசதிகள், பஸ் வசதிகள் அனைத்தும் கிடைக்கும். அதனால், கல்குவாரியை வரவேற்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

12. **திரு. கந்தசாமி, திருவளக்குறிச்சி**

அதிகாரிகள் அவர்களுக்கும், நமது கிராமம் சார்பாகவும், நமது பொதுமக்கள் அனைவருக்கும் காலை வணக்கத்தை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கல்குவாரி உங்கள் எல்லோருக்குமே தெரியும். தெரிந்தும் நாம் ஆதரிக்க வேண்டும் என்றால், உரிமையாளர் தனித்த முறையில் எந்தவித ஆட்களுக்கும் சப்போர்ட் பண்ணாமல் எல்லாருக்கும், எல்லாரும் பயனடையனும். இந்த ஸ்கூலுக்கு உங்களால் முடிந்த அளவிற்க்கு பிள்ளைகளுக்கு படிப்பதற்கு போதுமான அளவிற்கு வசதி செய்து தர வேண்டும். ஏனென்றால், அவர்கள் சந்திக்கிறது ஏராளம். பேணா, பென்சில், நோட் புக், எக்ஸ்ட்ரா பென்சில் வாங்குறது இதுமாதிரி முடிந்த அளவிற்கு

பண்ணித்தாங்க. அதேமாதிரி குவாரி உரிமையாளர்கள் பார்த்தீர்களென்றால், சுற்றுச்சுழலையும் பார்த்துக்கொள்ளுங்கள். நன்றி, வணக்கம்.

**துணை ஆட்சியர் அவர்கள்:**

"இந்த கருத்துக்கெடுப்புக் கூட்டத்தை முடித்துக்கொள்ளலாமா? பெண்கள் என்ன கூறுகிறீர்கள். தங்களுடைய சம்மதத்துடன் இந்த கருத்துக்கேட்புக் கூட்டத்தை முடித்துக் கொள்கிறோம்.நீங்கள் கூறிய அனைத்துக்கருத்துகளும், ஏற்கனவே ரெகார்ட் செய்யப்பட்டுள்ளது. கொடுக்கப்பட்ட மனுக்களும் மாவட்ட நிர்வாகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்று சம்மந்தப்பட்ட பொறியியல் அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று கூறிக்கொள்ளகிறோம். இந்த கருத்துகேட்புக் கூட்டத்திற்கு ஒத்துழைப்புக் கொடுத்த பொதுமக்களுக்கும், அரசு அலுவலர்களுக்கும், பத்திரிகைத்துறை காவல்த்துறை நண்பர்களுக்கும் மற்றும் மாசுக்கட்டுப்பாடு வாரிய அலுவலர்களுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்." என்று கூறினார்.

**இணைப்பு:**

1. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல் (21 பக்கங்கள்: 249 நபர்கள்)
2. திட்ட உரை விளக்கக்காட்சி
3. பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் – 15 எண்கள்
4. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு குறும்பதிவி.

16(03)26

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,**
**தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,**
**பெரம்பலூர்.**

**மாவட்ட ஆட்சியர் நேர்முக**
**உதவியாளர்(பொது)/துணை ஆட்சியர்,**
**பெரம்பலூர்.**